


# ளொளி

ஸ்ரீ கார்த்திகேசு சுவாமிகள்
நூற்றாண்டுச் சிறப்பு மலர்
**1896 - 1996**


270
கார்த்
SL IPR

# அருளொளி

ஸ்ரீ கார்த்திகேசு சுவாமிகள் நூற்றாண்டுச் சிறப்பு மலர்

1896 – 1996

270
கார்த்
SU



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்


## தவத்திரு கார்த்திகேசு சுவாமிகள்

ஒருக்கால் உனதுபெயர் ஓதினால் அன்பின்
பெருக்கால் ஆனந்தம் பெருகுதே - திருக்கார்த்தி
கேயா அசுரருடல் கீண்டவடிவேற் காங்
கேயா நின்றாளே கெதி.

24590

கார்த்திகேயா வெனவுன் றிருநாமம் புகன்றாலுங், கண்களாரப்
பார்த்தாலும், பணிந்தாலும், படித்தாலும், பக்தியொடுபாடிப்பாடி
பார்த்தாலும், அணைத்தாலும், அத்தனைக்குந் தித்திக்கு மமுதேநின்பாற்
சேர்த்தாளும், திருவடிக்கே தெண்டனிட்டேன் அன்புடைய சேயன் நானே.

Space donated by:



"You are the light that gives light to the world. A city that is build on a hill cannot be hidden. And people don't hide a light under a bowl. They put the light on a lampstand. Then the light shines for all the people in the house. In the same way, you should be a light for other people. Live so that they will praise your Father in heaven."

- Jesus Christ

**NEW PUSPA STORES**

**127, GALLE ROAD,**
**COLOMBO - 04**

தமிழ்ச் சங்கம்



எமதருமையான சகாத்மாக்களே!

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியான உங்கள் தாதையின் பெயரால் உங்கள் யாவருக்கும் அன்பும், அமைதியும், ஆனந்தமும் ஏற்படுவதாக!

அன்றொருகாலம் அண்டசராசரமே இருள் வயப்பட்டிருந்தது. அசுரத்தனத்தின் ஆட்சி எங்கும் விரிந்து பரந்து நிலை கொண்டிருந்தது. சுரத்தனம் தன் இயலாமையால் மறைந்து ஒளிந்து கொண்டது. எங்கும் அநீதி. சத்தியம் மறைந்து அசத்தியம் நிலைகொண்டிருந்தது. இன்னிலைகண்டு கலங்கிய ஆதிசக்தி தன் நிர்மல, நிற்குண, நிலையினின்றும் தனிப்பெருங்கருணையால், இயங்கத்தலைப்பட்டது.

அன்னை பராசக்தி முக்கண்ணனின் முகக்கண்களை தன்னிரு கைகளினால் புதைத்தாள். அவன் அகக்கண்ணைத் திறந்தான். நெற்றிக் கண்ணால் அக்கினிப் பொறிகள் பறந்தன. அந்த ஒளி வெளியில் இருள் மறைந்தது. அதன் வெம்மை தாளாது போக அதனை சரவணப் பொய்கையில் விழச் செய்தது தாய்மை. குளிர்ந்த முத்தீப் பொறிகள் கார்த்திகை முத்துக்களாக திரண்டன. அவற்றை ஒன்று கூட்டினாள் அருளன்னை. முத்தாரம் கார்த்திகேயனாக உதித்து உலகம் உய்ந்தது.

உதித்தவன் உலகைப் பார்த்தான். இருள் தெளிய வில்லை. இன்னல்கள் முடியவில்லை. காரணம் என்ன? சிந்தித்தான். தவற்றைக்காண விழைந்தான். கைலயம் நோக்கி விரைந்தான். வழியில் சிருஷ்டி கர்த்தனாகிய வேத முதல்வன் ஆக்கலில் ஈடுபட்டிருந்தான். அவன் கார்த்திகேயனைக் காணவில்லை. அவனது அறிவு, ஆணவ, கன்மவினையால் மூடிநிற்க சிறுவனாய் வந்த முருகனை அவன் பொருட்படுத்த வில்லை.

உய்யவந்த திரிகனல் உசாவத்தொடங்கியது. "அ(ய்)யனே, என்ன செய்கிறீர்?" "படைக்கிறேன்" "படைப்பிற்கு ஆதாரம் என்ன?" "பிரணவம்" "பிரணவம் என்றால் என்ன? அதன் பொருள் என்ன?" திடீர் அமைதி. அயனது மயக்கம் வெளிப்பட்டது. திகைத்தான். அவனுக்கு நினைவு வரவில்லை. தடுமாறினான். வெகுண்டான் குமரன். குட்டினான் தலையில்.

சிருஸ்டியின் மூல தத்துவத்தை மறந்து உன் அறியாமையையும், ஆணவத்தையும் சேர்த்து உயிர்களை சிருஷ்டித்து துன்பத்தை துயரத்தை அசுரத்தனத்தை வளர்த்த நீ தண்டனைக்கு உட்படு, எனச் சிறையிலிட்டான்.

தானே சிருஷ்டியை தொடங்கினான். ஆணவமும் அறியாமையும் மறைய அறிவும் ஆற்றலும், அன்பும் அமைதியும் பிறப்பெடுத்தன.

இதனை அறிந்த கயிலைவாசன் முருகனை அழைத்து விபரம் கேட்டான். பிரணவத்தின் பொருளை முருகா நீயறிவாயா எனக் கேட்டதற்கு என்னை பிரசவிக்க காரணமான பிரணவத்தை நீர் அறிய வேண்டின், நான் குருவாக வேண்டும் நீர் சீடனாக வேண்டும். அது வன்றோமுறைமை என்றான்.

ஆதிசிவன் தாள்பணிந்து சீடனாகி முருகனிடம் பிரணவத்தின் பொருளுணர்ந்தான், மகிழ்ந்தான். முருகா நீ இதை எங்ஙனம் அறிந்தாய் எனச் சிவன் கேட்க, "அண்ணலே! தந்தை மதியன்றோ பிள்ளையின் விதி நிற்குண, நிர்மல, சுயப்பிரகாசமாகிய தங்கள் சிருஷ்டிக்கு எதுதான் புரியாது. அறிவால் அறிய முடியாதது அது வன்றோ" என்றான்.

சகாத்மாக்களே! இந்த புராண வரலாறு இன்று நடக்கிறது. இன்று படைத்தல் தொழில் செய்யும் அன்னை தந்தையர். தம் காம, குரோத, மோக மாச்சர்யங்களையே மூலவித்தாக கொண்டு பிரபஞ்ச உற்பத்தியை நடத்துவதால் தான் இன்றைய அழிநிலை. இது மாற அறநெறிச் சிந்தனைகள் வளர வேண்டும் தன்னையறியும் அறிவு மலர வேண்டும்.

"தன்னை அறிந்தவன் தான் தலைவனை அறிவான்"

தன்னில், தன்னை, தன்னால் காட்டிக் கொடுத்து சுரத்தன்மை- மனுதத்துவத்தை - வளர்ப்பதே எமது நிறுவனத்தின் பணி. இதன் விளைவு ஆனந்தம் - அமைதி - அன்பு இக்கருத்துகளை தம்மால் இயன்ற மட்டும் வெளிப்படுத்திய எந்தை கார்த்திகேயனின் நூற்றாண்டு சிறப்பு மலராக, வாடாத நல்லாரமாக இவ்வருளொளியினை அவனது பொற்கமலங்களில், உலக மக்கள் அனைவர் சார்பாகவும் அனைவரது அமைதிக்காகவும், ஆனந்தத்திற்காகவும் சமர்ப்பிக்கின்றேன்.

அடியார்க்கடியன்

இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கிளைத் தலைவர்

ஸ்ரீ மத் சுவாமி ஆத்மகனாநந்தாஜீ மஹராஜ் அவர்களின்

## வாழ்த்துரை



நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, கொழும்பு மாநகரில் ஆத்மீகப் பணியாற்றிவரும் கொழும்பு அருளொளி நிலையம், தனது ஸ்தாபகர் தவத்திரு கார்த்திகேசு சுவாமிகளின் நூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுமுகமாக மாணவரிடையே ஆன்மீக விழிப்பை ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கவிருக்கிறார்கள் என்பது வரவேற்கத்தக்க விடயமே.

அத்துடன் 'அருளொளி' என்னும் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டு, தொடர்ந்து அதை ஒரு சஞ்சிகையாகவும் நடத்த உள்ளனர் என்பதும் பாராட்டத்தக்க விடயமே.

இவற்றிற்கெல்லாம் மேலாக 'குருகுலம்' ஒன்றை அமைத்து மாணவர்களுக்கு நற்பண்புகளையும் நற்பழக்கங்களையும் வளர்த்துக் கொள்ள ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளனர் என்பதும் ஒரு உன்னதமான விடயம்.

அன்பும் பண்பும் நிறைந்த சமுதாயமே அமைதியையும் ஒற்றுமையையும் காணமுடியும். எனவே 'அருளொளி' நிலையத்தினரின் பணிகள் மிகவும் பயனுள்ளவை, ஆக்கபூர்வமானவை என்பதைத் தெளிவாக அறியலாம்.

'அருளொளி' நிலையத்தினருக்கு எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இறைவன் அருளால் அவர்களது பணிகள் மேன்மேலும் வளரப் பிரார்த்திக்கிறேன்.

சுவாமி ஆத்மகனாநந்தா

ஓம் ஶ்ரீ ராகவேந்திராய நம:

பூஜ்யாய ராகவேந்த்ராய ஸத்ய தர்ம ரதாயச!

பஜதாம் கல்ப வ்ருக்ஷாய நமதாம் காமதேனவே!!



அன்பளிப்பு

ராகவேந்த்ரா தாஸ் – மரியதாஸ்



ஸ்ரீ கார்த்திகேசு சுவாமிகள் நூற்றாண்டு விழாவின் பிரதம அதிதியும், மொரீசியஸ் நாட்டுத் தூதுவரும் அறங்காவலரும் வள்ளலுமான திரு. தெ. ஈஸ்வரன் அவர்கள் வழங்கிய நல்வாழ்த்து.

# ஆன்மீகம் வாழ்க!

"வளர்ந்த குஞ்சுகள் பிரிந்த போதும்
வருந்த வில்லை தாயடா
மனித ஜாதியின் துயரம் யாவுமே
மனதினால் வந்த நோயடா!"

இது கண்ணதாசன் பாட்டு. தாய்க்கோழி, குஞ்சுகள் வளர்ந்தவுடன் பிரிந்து விட்டால் கவலைப் படுவதில்லை. ஆனால் மனிதனை விபரம் தெரிந்த நாள் முதல் கவலை அரிக்கத் தொடங்கி விடுகிறது. இதற்கு முக்கிய காரணம் அவனிடம்இருக்கும் மனம் என்ற ஒன்றுதான்.

ஒரு நாயோ பூனையோ சோகமாக இருப்பதை நாம் பார்த்திருக்கிறோமா? காரணம் மனம் என்ற ஒன்று மிருகங்களுக்கு கிடையாது. இந்த மனம் தான் மனிதனை படாதபாடு படுத்துகிறது. இந்த மனதை ஆளத் தெரிந்துகொண்டுவிட்டால் எல்லையற்ற இன்பம் நமது சொத்தாகி விடுகிறது.

மனமெனுமோர் பேய்க் குரங்கு மடப்பயலே நீதான்
மற்றவர் போல் எனை நினைத்து மருட்டாதே கண்டாய்
இனமுற என்சொல் வழியே இருத்திஎனிற்
சுகமாய் இருந்திடு நீ.

என்று வள்ளலாரும் வாதிட்டார். இந்தப் பேய்க் குரங்கு போன்ற மனத்தை அடக்கும் வழி என்ன என்பதே கேள்வி? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

இந்த மனக் கவலையை மாற்றும் பொறுப்பைத்தான் கொழும்பு அருளொளி நிலையம் ஏற்றிருக்கிறது. மனம் நம் வயப்படுவதற்காக அபிஷேகம், தீபாராதனை, பஜனை, திருவடிவழிபாடு முதலியவற்றை நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

நமது திருநாட்டின் நாளைய மன்னர்கள் மாணாக்கர்கள். அவர்களை நல்வழிப்படுத்த வல்லது ஔவையின் நூல்களும் திருக்குறளும். இந் நூல்களைப்பற்றி அறநெறிப் பாடசாலை மாணாக்கரிடையே போட்டிகளை வைத்து பரிசளிப்பது மிகச் சிறப்பான தொண்டு.

இத்தொண்டுகள் பலவற்றைச் சிறப்பாகச் செய்துவரும் காப்பாளர் சிவகுருநாதன் வாழ்க! அவருடன் தோள் கொடுத்து தொண்டாற்றும் அனைவரும் வாழ்க.

அன்புடன்
தெ.ஈஸ்வரன்

**Space donated by:**



அருளொளி என்பது, அகிலமெல்லாம் நிறைந்து நிற்கின்ற அழியாத சக்தி. அதை அறிவாலறிந்து, ஆனந்தமடைதற்கு மனிதப்பிறவி தான் தகுதியுடையது. அருளொளிதான் அனைத்துயிர்கட்கும் பொதுவானது. ஆகவே அருளொளியுள் அடங்கிக்கிடக்கின்ற அற்புதமாகிய உட்பொருளைத் தேடி எடுத்துத் தேக்கிச் சேகரித்து வைத்துப் பக்தர்களாகிய நீங்கள் பயனடையுங்கள் என வாழ்த்துகின்றோம்.

உங்கள் – சித்ரமுத்தன்.

# G.T.S.TRADINGS

82/4, Wolfendhal Street,

Colombo - 13

Tel: 431835

# தத்துவ ஞானத் தவச்சாலையின் சத்திய சமரச சன்மார்க்க ஏக காலப் பிரார்த்தனை

இன்று நாட்டில் நிலவும் அமைதியற்ற சூழலும், பகைமை, குரோதம், முதலிய வேண்டாத உணர்வுகளும் நீங்கி, இங்கு சுபீட்சமான வாழ்வு மலர இறைவனை மன்றாடு வோம்.

பிரபஞ்சத்தில் ஏற்படும் சலனமே ஆக்கத்திற்குக் காரணம். அச்சலனத்தின் வெளிப்பாடே நாதம். நாதத்தின் உராய்வில் வெளிவரும் வெப்பமே – ஒளி. இவ் ஒளியில் ஏற்படும் தோற்றங்களே உயிர்கள். சர்வ வியாபகமான சிவம் தன் அசைவால் (நடனத்தால்) உலகைத் தோற்றுவிப்பதாக சனாதன தர்மம் சாற்றுகிறது.

பேரொளிப் பிரகாசமான இறைவன் தன்சாயலாக மனிதனைப் படைத்தான் என்கிறது விவிலியம். அல்லா(ஹ்) என்னும் சர்வசக்தியும் திரண்டெழுந்த ஒன்று (நூர்). அது தன்னுடைய ஒளியில் இருந்து உயிரினங்களைத் தோற்றுவித்த உண்மையினைத் திருமறையாம் திருக்குர்ஆன் அழகுற இயம்புகிறது.

பேரறிவான ஒளியே நிலையான அமைதியைத் தருகிறது, என்கிறது பௌத்தம். எல்லாம்வல்ல இறைவன் ஒலிமயமானவன், ஒளிவடிவானவன். இதனைச் சகலரும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரிய இவ் அருளொளியை, உலக அமைதி வேண்டிப் பகைமையற்ற சகோதரத்துவமும், அன்புமயமான சமரச வாழ்வும் அமைய, உலகெலாம் சத்திய சமரச சன்மார்க்கம் விளங்க, மக்கள் இயற்கையைப் பேணி, இயற்கையோடொத்த வாழ்வு வாழ, பிரார்த்திப்போம். இன, மத, மொழி வேறுபாடு இல்லாது சகலரும் நம் நாட்டையும், இவ்வுலகையும் அமைதிப் பூங்காவாக, மாற்ற ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போம்.

### பிரார்த்தனை

வெட்டவெளியெலாம், நீக்கமற நிறைந்து ஒளிரும் அருளொளியே!
ஆழிசூழ் உலகமெல்லாம் அமைதி மேவ, ஆகாத பகை ஒழிந்து அன்பு உண்டாக, ஆராத கவலை பிணி அகன்று போக, ஆக்கமொடு மக்கள் குலம் அழகாய் வாழ, ஆண்டவனை வேண்டுதல் செய்தருளை நாடி, ஆனந்தத் தவநிலையை அனுகவும் உனது தனிப்பெருங் கருணையினால் எல்லோர் இதயத்திலும் ஆத்மசாந்தி நிலவவும் செய்வாயாக.

இதனை மனத்தில் உச்சரித்தவாறு, 5 நிமிடம் மௌனமாக, நிமிர்ந்து இருந்து, புருவமத்தியில் உள்ள லலாட வெளியில் மனத்தை நிலை நிறுத்தி உங்கள் ஆத்ம ஜோதியைத் தியானித்தல் வேண்டும்.

இப்பிரார்த்தனை குறித்த வேளையில் சகலராலும் தத்தம் இருப்பிடத்தில் இருந்தபடியே செய்யக்கூடியது. இவ்வழிபாட்டில் அனைவரும் இணைந்து செயற்பட்டால் விரைவில் அமைதி காணலாம். இது உறுதி.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!..

கொழும்பு தமிழ்ச் சங்கம்

– அடியார்க்கடியன்

Space donated by:



எம்பொரு ளென்பொரு ளென்றே - சொல்லும்
எல்லாச் சமயத்து ளெல்லார்க்கு மொன்றே
செம்பொரு ளென்பது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி.

# RAJHAN AGENCY

DEALERS IN EXPORT & IMPORT RICE MERCHANTS
CENTRAL BANK AUTHORISED MONEY CHANGER

No: 84 Oldmoor Street,
Colombo-12
T.P. 432315

No 355/12 Main Street,
Colombo - 11
T.P. 422018 343749
Fax: 421063

# நிறைஞானியான பூரணன்

# கார்த்திகேசு ஐயா

வைத்திய கலாநிதி சு. கனகரத்தினம். J.P.
( தலைவர் - தத்துவ ஞானத் தவச்சாலை )

தாய்மையின் தயையும்; குழந்தையுள்ளமும்; இளநகையுடன் வீராதி வீரனாக நடைபோடும் தீரமும்; உலகத்தாரின் அறியாமை கண்டு நகைக்கும் உள்ளத் தெளிவும்; இன்பம் துன்பம், புகழ்ச்சி இகழ்ச்சி, விருப்பு வெறுப்பு, பகை நட்பு, கூதிர் வசந்தம் யாவையும் பேதமின்றி ஒரே தன்மையில் ஏற்றுக்கொள்ளும் மனத் திண்மையும் கொண்டு, தன்னைத் தானே அடக்கி ஆளும் தனிப்பேர் ஆண்மையும் ஒருங்கமைந்த எழிமையான உருவமாக வாழ்ந்த மாபெரும் பூரணர் நம் கார்த்திகேசு ஐயா.



அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அண்டமெலாம் நிறைந்திருக்கும் ஒன்றே இப் பிண்டத்திலும் நிறைந்திருக்கிறது என்ற மாபெரும் தத்துவத்தை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குவதுடன் மட்டுமன்றி; கண்ணன் அண்ட மெல்லாவற்றையும் தன் வாயில் காட்டி யசோதையை திகைக்கவைத்தது போலத், தமது மெய்யிலேயே காட்டி விளக்கமளித்த மாமேரு கார்த்திகேசு சுவாமிகள்.

கங்கை முதல் கன்னியா குமரிவரை தீர்த்தயாத்திரை செய்தாலும், விரதங்கள் யாவையும் அனுட்டித்தாலும், அந்தணர்க்கு தானதருமங்கள் செய்தாலும் மெய்ஞ் ஞான உணர்வு பெறாதவன் எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் முத்தி யடையமாட்டான் என்று கார்த்திகேசு அடிகள் அறுதியிட்டு தமது மறைநூலாகிய மெய்ஞ்ஞான தீபம் என்னும் கீதையில் கூறியுள்ளார்.

அட்டமா சித்தி களைப் பெற்றவன் சித்தனல்ல. பரிபூரணத்தைப் பெற்ற நிறை மனிதனே சித்தன். சித்து விளையாட்டை இராமகிருஷ்ண பரமஹம்சர் வெறுத்தது போலவே கார்த்திகேசு சுவாமிகளும் வெறுத்தார். இராமலிங்க வள்ளலாரை, அமுதானந்த முனிவரை, யோக சுவாமிகளை, சித்திரமுத்தடிகளை தன்னுள் தானாகக் கண்டு இரண்டறக் கலந்து சுகித்த பெற்றியர்.

நாம் தவறு விடும் போது கடிந்து தடுத்து முறை தவறாது வாழப் பயிற்றும் தந்தை நிகர் தயாளர். அவரது வழிகாட்டலில் வாழ எனக்குக் கிடைத்த பேறு ஒன்றே என்னை இன்று ஒரு நிறை வாழ்வு வாழும் பெற்றியனாக்கியது என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத பேருண்மை. அதனாலே தான் இன்று பல தசாப்தங்கள் கழிந்த பின்னும் நீங்காத நினைவுகளாக இவற்றை என்னிதயத்தில் தேக்கி வைத்திருந்து இன்று சகலருக்கும் மதபேதங் கடந்த அந்த மாபெரும் இல்லற ஞானியைப் பற்றிய எனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதில் பேருவகையும் பெருமையும் அடைகிறேன். மேடைகளில் பலமணிநேரம் அலங்கார வார்த்தைகளால் செவி இனிக்கப் பேசுவதைவிட ஐந்து நிமிடமேனும் தாம் சொல்வதைச் செயலளவில் செய்துகாட்டி உணர்த்துவதே மாண்புடையது.

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம், உடம்பினில் உத்தமனைக் காண் என்ற மூதாட்டி ஔவை மொழிக்கொப்ப ஒவ்வொருவருக்கும் அவரவர் மெய்களிலேயே

அவரவர் களுடைய மெய்க்குருநாதன் இருக்கிறான். அவனை ஒரு சற்குருநாதன் தொட்டுக் காட்டத்தான் கண்டறிய முடியும். இதனை எமது கார்த்திகேசு சுவாமிகள் பட்டவர்த்தனமாக "என்குரு நா(த்)தான்" எனப் பரிபாசையில் பேசி, அந்நாவை தூய்மையுடன் பேணி முறைப்படி உபயோகித்தால் சகல இறைமையும் நம்மை வந்தடையும் என்று விளக்கி அதனை உபயோகிக்கும் நன் மார்க்கத்தையும் பக்குவமறிந்து பயிற்றியும் வந்த கற்பகக் களிறு.

நிறை ஞானியாக வாழ்ந்த தவத்திரு கார்த்திகேசு சுவாமிகள் தாம் சொன்னதை சொன்னபடியே செய்து காட்டத்தக்க ஆற்றலுடன் பிறர் சந்தேகங்களை ஐயந்திரிபற குழந்தைகட்கு பாடம் புகட்டுவது போல எளிய உவமைகள் மூலம் விளக்கித் தீர்த்து வைக்கும் திறமையும் தெளிவும்மிக்கவர்.

முற்காலச் சித்தர்கள் மனிதநேயம் மிக்கவர்கள். சாதி, சமய, மொழிகளுக்கு அப்பாற்பட்டவர்கள். மக்களின் ஆன்ம ஈடேற்றத் திற்கும், ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கும் சாதி சமய குலபேதங் கடந்து சத்திய சமரச சன்மார்க்கத்தை பரப்பச் செயற்பட்டவர்கள். போலிச் சடங்குகள், பொருளற்ற நடைமுறைகள், மூடநம்பிக்கைகள் யாவையும் கண்டித்தவர்கள். மனித வாழ்வு மிக உயர்ந்தது என்ற கருத்தை உறுதியாக நம்பியவர்கள். அதே வழியில் சமயச் சழக்குகளையும் சாதிச் சம்பிரதாயங் களையும் துச்சமாக மதித்து மூடநம்பிக்கை களையும் பழக்கவழக்கங்களையும் தம்வாழ்வில் உடைத்தெறிந்து வாழ்ந்தவர் கார்த்திகேசு சுவாமிகள்.

சித்தர்கள் தம்மை உயர்த்திக் கொண்டதுடன் உலக மக்களையும் உயர்த்து வதற்கு பல வழிகளைக் கண்டறிந்தனர். அகவிருளைப் போக்கும் சீரிய சிந்தனை களுக்கு வித்திட்டார்கள். உடலில் நோய் வராதவாறு காக்கவும், வந்தால். அதனைப் போக்கும் மூலிகைகளைக் கண்டறிந்து அவற்றை உபயோகிக்கும் முறையையும், அவற்றைப் பயன்படுத்த வேண்டிய வேளையை அறியும் ஜோதிட சாத்திரத்தை கணித்தும் தந்துள்ளார்கள். கார்திகேசு சுவாமிகளும் இம்மூன்று துறைகளிலும் தேர்ந்தவராக விளங்கியவர்.

அவர் ஓர் இல்லறத் துறவி, நிறை ஞானி, சித்தன், முத்தன், பூரணன். *

*With Best Compliments from*

## பேரின்பக் குறள்

ஆசாரம் தங்க அருள் ஒளிரும் அவ்வமயம்
கூசாமல் ஓடும் குறை.

உத்தமர்கள்கூடி ஒருங்கமைத்த எத்தலமும்
சத்தியம் நின்றோங்கும் சபை.

மாசின்றிக் கற்றபடி ஒழுகி உண்மை உப
தேசிப்பவர் ஆசிரியராம்.

பற்றற் றிறைவன் இணையடியைப்
மற்றவர்க்கும் சொல்வர் குரு. (பற்றுமென

ஆதிபரம் பொருளைப் பற்றி அருவவழி
ஓதிடுவர் உண்மைக்குரு.

சோதனைகள் கண்டு தயங்கார் அரியகுரு
போதனையை நம்பினவர்.

குருவை அருவமதிற் கண்டு அவர்புகல் நற்
திருவுரையைப் பற்றி விலகேல்.

நெற்றிவெளி உள்ளறிவை ஏவி நிலைநின்று
வெற்றியுற நற்றவங்கள் செய்.

நவவழியைக் காணாத நாக்கு நலனிழந்து
தவநிலையில் நிற்கத் தடை.

தத்வமசிப் பொருளும் நாமே எனஉணர்ந்த
சித்தமது முத்தித்துறவு.

அந்தரத்தில் தந்திரமாய் நின்று தவமியற்றிப்
பந்தமற நிற்றல் நியதி.

மழலை மதியுடை யோராகி மறுபிறவி
அழலறுத்தல் முத்தர் முடிவு.

பற்றுடைய நெஞ்சன் பல்கோயில் பார்
சுற்றினும் ஆங்கில்லை சுகம். (முழுதும்

பேரின்ப மாகுறளைக் கற்றுணர்ந்து ஒழுகின்
பாரிலுயர் சீர்மை மிகும்.

சித்ரமுத்தடிகள்

MR. A. SUPPIAH
No: 46 Muthuwella Mawatta,
Colombo-15

அடியார்க்கடியவன்

# கார்த்திகேசு ஐயா

''தனக்கோர் உருவில்லை தான் எங்குமாகி
மனத்து அகமாய் நிற்கும் அது.''
ஔவைகுறள்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி விளங்கும் சிவத்தை தம்முள் கண்டு அதனுடன் கலந்தவர்கள் சீவன் முத்தர்கள். இவர்கள் துன்பத்தை தருவதாய நல்வினை தீவினைகளின் பாற படாது; விருப்பு வெறுப்பு அற்ற மனத்தினராய் நடுநிலையில் வாழ்பவர்கள். ஆணவம் கன்மம் மாயை எனும் மூன்றும் அற்ற ஒரே பொருளாம் பதியை தம்முட்தாமாக காண்பவர்கள். குருலிங்க சங்கமத்தை அடைந்தவர்கள். இறவாத் தானமாகிய அறவோனை நண்ணியவர்கள். இத்தகையோர் தமது மெய்யில் வேண்டுங்காலம் வாழ்ந்து மெய் பொய்யாகும் வேளை ஆத்மநாதனாம் சிவப்பிரகாசத்தில் ஒன்றுவர்.

ஆலவட்டம் போலும் உருவமைந்த எமது ஈழத்திருநாட்டின் வடபாலுள்ள யாழ்ப் பாணப் பகுதியில் அவதாரம் செய்த கார்த்தி கேயனும் இவ்வாறே தனது சுட்டுருவாம் மெய்யிலே எண்பத்து மூன்றாண்டு காலம் இனிது வாழ்ந்தார்.

தமது முன்செய் தவப்பயன் கூட்ட விட்டகுறை தொட்டுக் கொண்டது. பக்குவ மடைந்த ஆன்மாக்களைத் தன்வயப்படுத்த இறைவன் தேடி ஓடுதல் போலும் கார்த்தி கேயனின் பக்குவநிலை கண்டு அவர் வாழ்ந்திருந்த அகமது வழியில் அமைந்த இல்லத்தே தேடிச்சென்று ஆண்டியாய், அரனுருவாய் பற்பல வேடம் காட்டி திருவிளையாடல் செய்து, ஈற்றில் தன்சாயலாக அவரையும் மாற்றியமைத்து தடுத்தாட்கொள்ள; மெய்ஞ்ஞான தேசிகனாய் பூலோக பாண்டிய குரு அமுதானந்த வள்ளல் 1926ம் ஆண்டு இலங்கை வந்தார்கள்.

உலகமுய்ய ஆதிசிவனார் திருவிளை யாடல் புரிந்த பாண்டிய வம்சத்தில் பிறந்து மெய்யறிவைத்தேடி, ஆன்ம விசாரமுற்று அகத்தியம் முதல் அண்ணாமலையூடாக மெக்கா மெதீனா முதலாம் இறையருள் தலங்களைத் தரிசித்து ஆங்காங்கு வாழ்ந்த இருடிகள் தபோதனர்களிடம் சிவராஜயோகம் என்னும் மெய்ஞ்ஞானத்தை முறையே ஐயந்திரிபு அறக்கற்று, கற்றபடி அங்கு தவமியற்றி சச்சிதானந்த நிலையடைந்த பிரமஞான மாகிய அமுதானந்த வள்ளல் தனது ஞானபரம் பரைக்கு ஏற்ற புதல்வனாக நம் கார்த்திகேயனைக் கண்டு தெளிந்து அவருக்குத் தமது திருவுருவ தீட்சையை - சின்முத்திரையை உபதேசித்தார்கள்.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் உயர்ஞான தீட்சையை பெற்ற கார்த்திகேயனும். தான் பெற்ற திருவுருவ நிலையில் நின்று போற்றி பயின்று சித்த சுத்தியும் மனோலயமும் கைவரப்பெற்றார். அமுதானந்த வள்ளல் தமது ஞான சுதனுக்கு ஞான வாழ்வுடன் இல்லற வாழ்வையும் தாமே தேடி கூட்டிவைத்தார்கள். தனது ஞான பரம்பரை தளிர்க்க இரு சுதர்களை பெறவருள் பாலித்து தமது 112 வது வயதில் நிர்விகர்ப்ப சமாதி கூடினார்கள். தாம் சமாதி கூடும்போது தான் தன் சாயலாக வைத்துப் பூசித்த ஞான விநாயகன் விக்கிரகத்தை இலங்கைக்கு தன் பரம்பரைக்கு மூலமுதலாக அனுப்பிவைத் தார்கள். கார்த்திகேயனும் அவ் விநாயகனை அனுதினமும் ஏற்றியும் போற்றியும் வழிபட்டு வந்தார்.

1954ம் ஆண்டில் இவர் தமது ஞான தேசிகனின் திருச்சமாதியை தரிசிப்பான் வேண்டி குடும்பசமேதராய் இந்தியா பயணமானார். தனது சுதனின் ஞானநிலை முற்றுப்பெற இந்தியப் பயணத்தின் போது அடியேனை நோய்வாய்ப்

படுத்தி, திருவிளையாடல் செய்து, ஞான சித்தனாம் சித்திரமுத்தனைக் கண்டு, திருவடி தீட்சை பெற்று, மெய்ஞ்ஞானத் தெளிவும் சிவசாயுச்சிய பதவிக்கான மார்க்கமும் கண்டு, தாயகந் திரும்பினார் கார்த்திகேயன்.

தனது சீலமிகு வாழ்வால் " ஐயா" என யாவராலும் மதித்து அழைக்கப்பட்டார். இளையவரும் முதியவரும் கூட அவரை அப்படியே அழைத்தார்கள். ஆனால் அவர் தமது தவத்தால் - அருளால் - அன்பால் - இருளறு மொழியால், அன்பர்தம் இதயத்தில் பக்திமயமான உருப்பெற்று சுவாமிகள் எனும் அருள்நிலை கொண்டார்.

பார்வைக்கு இல்லறத்தன் போலக் காட்சியளித்த அவர் மனத்தை பற்றற்ற மோன நிலையில் நிறுத்தி சீரிய துறவறம் காத்தமை இவ்வுலகு உணராதவொன்று. தம்மைப் பிறருக்குக் காட்டிக்கொள்ளாது இலைமறை காயாகவும், உலகில் வாழ்ந்தும் அதனைப் பற்றாது தாமரை இலைத் தண்ணீர் போலும் வாழ்ந்தவர். இன்று சின்மயமதாகி ஆனந்த நர்த்தனம் செய்பவர்.

இவர் "நாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற பேரவாவில், தான் அடைந்து அனுபவித்த உயர்ஞான அனுபவங்களை தமது அன்பர்கள், அடியவர்களுக்கு கடிதங்கள் வாயிலாக எழுதி நல்வழிப் படுத்தினார்.

இவ்வாறு இவரால் தமது மச்சான் சின்னத்தம்பி அவர்களுக்கு எழுதப்பட்ட ஞான விளக்கங்களின் தொகுப்பு **மெய்ஞ்ஞான தீபம்** எனும் நூலுருவாக வெளிவர விருக்கிறது.

அவரது வாழ்த்து மடல்கள் சிலவற்றின் தொகுப்பு "காயகற்பம்" எனும் மகுடத்துடன் அண்மையில் தத்துவஞானத் தவச்சாலையால் வெளியிடப்பட்டுள்ளது.

அவர் போதகராக வாழாது மனிதரை உருவாக்கும் மனிதராக வாழ்ந்தார் என்பதே உண்மை. அவர் ஆற்றிய பணியையே அடியேனும் அவருடைய அருளாசியுடன் தொடர்கிறேன்.

அவர் காட்டிய வழியில் ஒருவன் தன்னுள் விளங்கும் அண்ணாமலையையும் உண்ணாமுலையையும் அறிந்து விசுவாசித்தால் அவன் இறவாப் பிறவா நித்திய வாழ்வைப் பெறுவான் என்பது உறுதி. - அடியார்க்கடியன்

*With best Compliments from*

## அமைதிக்கு வழி

☺ பிறர்மீது குறை கூறுவதை மறந்து, உனதுபிழைகளை நினைத்து திருந்து, பொறாமையும் பேராசையும் இல்லாமல் வாழப்பழகு. புகழ்வதையும், இகழ்வதையும் பொருட் படுத்தாதே. பகுத்தறிவுள்ள மனித னாகப் பரந்த நோக்குடன் வசி.

☺ சொர்க்கமும் நரகமும் என்பதை நீ நினைத்துப்பார், உனது உள்ளத்தில் தெளிவாகத் தெரியும் நிம்மதியோடு வாழ்கிற வாழ்வுதான் சுவர்க்கமாகும், நிலைகுலைந்து கவலையோடு வாழ்வது தான் நரகமாகும்.

☺ ஆண்டவன் தந்த அறிவை ஆக்க வேலைகளுக்கு பயன் படுத்து அற்ப விஷயங்களில் மனதைச் செலுத்தி மயங்காதே, வீட்டுக் கடமைகளோடு நாட்டுப் பணி களையும் ஆற்றி வெற்றிகரமாக வாழ்ந்து நற்பெயர் வாங்கு.

☺ உன் பேரறிவாகிய கடலில் குறையற மூழ்கி குற்றம்கடப்பின், மாசற்ற தூயவனாக மக்களால் மதிக்கப்படுவாய். ஆகவே நீ உனக்கு நல்லவனாக ஆசைப்படு.

*– கார்த்திகேசு சுவாமிகள்*

**ASHRAFF TRADERS**

**123, St. James Street,**
**Colombo - 15**

Tel: 522251, 523469

With Best Wishes From :-

"காமாட்சியின் கடாட்சம் பெற்றவனுக்கோ அத்வைத ஞானம் சித்தித்துவிடுகிறது. அவனுக்குப் பார்ப்பதெல்லாம் ஒரே பரம் பொருள்தான். சத்தியமான சமதரிசனம் அவனுக்குத்தான் இருக்கிறது."

ஸ்ரீ காஞ்சி காமகோடி




MANIYAM STORES

100, MALAY STREET,

COLOMBO - 2.

With Best Wishes From :-




சிவாய நமவென்று
சிந்தித்திருப்போர்க்கு
அபாயமொருநாளும்
இல்லை.

NEW RAJAN PRINT

OFFSET, LETTER PRESS PRINTERS & BOOK BINDERS.

No. 25, Kew Lane, Colombo - 02.

*With Best Wishes From :-*



# RAJIHALA VIDEO HOME

RAJENDRA'S

(PROPRIETOR)

No. 330, Sea Street,
Colombo-11
Telephone:- 434590, 338397

Res: 45/1 Mosque Lane,
Modera,
Telephone:- 526903

*With Best Wishes From :-*

# NEW ANANDA HARDWARE STORES

480 / 2 D, SRI SANGARAJA MAWATTE, COLOMBO - 12

TELEPHONE:- 348385

# பெத்தாச்சி சொன்ன கதை

சி. பாலசுப்பிரமணியம்

சின்னத்தம்பி ஒரு மருத்துவப் பரிசோதகர் அவரது தர்மபத்தினி சின்னம்மா இவர்கள் திரைகடலோடித் திரவியம்தேட மலாய்நாடு சென்றவர்கள். அங்கு றவாங் என்ற இடத்தில் இல்லறதர்மம் மேற்கொண்டு இருந்தனர். சின்னம்மாவின் சகோதரர் சின்னையா. அவர் இளமையிலேயே திருவுடையவராக இருந்த காரணத்தால் சின்னத்தம்பி அவரிடத்தில் அதிக மதிப்பும் பற்றும் கொண்டிருந்தார். சின்னை யாவும் தனது மைத்துணருக்கு ஞான நெறி களை இலங்கையில் இருந்தவாறு கடிதம் மூலமாக எழுதுவார். அவ்வாறு எழுதிவரும் நாளில் அஞ்ஞான இருள் அகலப்பெற்ற சின்னத்தம்பி சின்னையாவை ஞானகுருவாக ஏற்றுக் கொண்டு தமக்கு ஞானதீட்சை அளிக்க கேட்டுக்கொண்டார். அதற்கு தமது மாணவ னும் மைத்துருமான சின்னத்தம்பியின் பரி பக்குவ நிலையை சோதிக்க நினைத்தார். விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டில் ஆபிர காமின் விசுவாசத்தை பரீட்சிக்க ஆண்டவர் " நீ உனது தலைமகனை எனக்குப் பலியிடு வாயாக" எனக் கட்டளை இட்டார் என்ற கதை உள்ளது. அதுபோல சின்னத்தம்பியையும் தமது தலைமகனை தமக்குப் பலியிடத்தயாரா? எனக் கேட்டார்.

சின்னத்தம்பியும் சின்னம்மாவும் மனம் உவந்த சிறுத்தொண்டரைப் போல தமது தலைமகனை 1936ம் ஆண்டு கொழும்பிற்குக் கூட்டிவந்து தமது குருநாதரிடம் ஒப்படைத்து விட்டு மலாய் தேசம் சென்றனர்.

குருநாதன் கேட்ட பலியை கொடுத்து விட்ட திருப்தியில் சின்னையா "குருநாதா தாங்கள் கேட்ட பலியை ஒப்புக்கொடுத்த பின்னும் அடியேனுக்கு உபதேசம் தரத் தாமதம் என்ன? என 1937ல் கேட்டு எழுதினார். அதற்கு உத்தரவாக "1942ம் ஆண்டில் என் விரிவான ஆகாயத்தில் ஜோதியைக் கண்டு மறைவாய் எனப் பதிலிறுத்தார். அந்த தீர்க்கதரிசன வாக்கின்படி சின்னத்தம்பி 1942ல் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது காயப்பட்டவர் களுக்கு சேவை செய்துகொண்டிருக்கும் போது யப்பானியரின் குண்டு வீச்சில் அகப்பட்டு வானத்தில் தோன்றிய பேரொளியைக் கண்டு மறைந்தார்.

இவ்வாறு ஜோதியில் மறைந்த புண்ணிய சீலரினால் பலிக்கடாவாக ஒப்புக்கொடுக்கப் பெற்று, சின்னையா அவர்களுடன் அவரது வளர்ப்புப் பிள்ளையாக வாழ்ந்த புண்ணிய வானாகிய யான் என் மாமனாரின் இன்றைய நூற்றாண்டில், அவர் பற்றிய சிந்தனைகளை அசைபோடும் பேறுபெற்று அதனை உங்க ளுடன் பகிர்ந்துகொள்ள விளைகிறேன்.

அப்போது மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தேன் பள்ளிக்கூட விடுமுறை நாட்களில் எங்கள் ஊர் சரவணைக்கு வந்துவிடுவேன். ஊரில் எனது பெத்தாச்சி (தாயாரின் தாய்) இருந்தார்கள். பனஞ்சோலையும், தென்னஞ்சோலையும் கூடிய பெரியவளவு. வளவைச் சுற்றிலும் தோட்ட, வயல் நிலங்கள். எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் நாரந்தனை கந்தசுவாமி கோயில் தெரியும். கோயில் மணியோசை கேட்கும் மூன்று வேளையும், எனது பெத்தாச்சி முருகா எனக் கும்பிடத் தவறமாட்டார். குடு குடுத்த பஞ்சவர்ணக் கிழவி. வெள்ளிக் கம்பி போன்ற தலைமயிர், பொக்கை வாய் எந்நேரமும் தாம்பூலம் தரித்தவண்ணம் என்னைச் செல்லமாக "மகள்பேரா" என்று கூப்பிடுவா. நான் வெற்றிலை இடித்துக் கொடுத்து எங்கள் மூதாதையர்களின் கதைகளைக் கேட்பேன். எனது மாமா அடிக்கடி என்னையும் தன் தாயாரையும் பார்க்க வருவார். அவர் கரம்பன் கிழக்கு முருகமூர்த்தி கோயில் எதிரில் இருந்த

வளவில் வசித்துவந்தார். ஒரு முறை சின்ன மாமா பெத்தாச்சியைப் பார்க்க சரவணைக்கு வந்தார். அவ்வேளை நான் வெளித்திண்ணையில் இருந்துகொண்டு பெத்தாச்சிக்கு வெற்றிலை இடித்துக் கொண்டிருந்தேன். சின்னமாமா "ஆச்சி" என்று கூப்பிட்டார். உடனே பெத்தாச்சி "யாரு என்ர ஞானியா" என்று கேட்ட குரலில் விபரிக்க முடியாத பாசமும் அன்பும் இளையோடி, ஒரு பெருமை உணர்வு கலந்திருந்ததை நான் கண்டேன்.

சின்னமாமாவை "என்ர ஞானி" என்றே அவ அழைப்பா. ஒரு நாள் சின்னமாமாவை "என்ர ஞானி" யென்று கூப்பிடுகிறீங்களே, அது ஏன்? என்று கேட்டேன்.

அதற்கு பெத்தாச்சி அட மகள்பேரா, உன்னுடைய சின்னமாமா மூல நட்சத்திரத்தில் பிறந்தவன். அவன் பிறந்த வேளை ஒரு சுவாமியார் வீட்டு வெளித் திண்ணையில் நிஷ்டையில் இருந்தார். பிள்ளை பிறந்தபின் அவரைக் காண வில்லை. எங்குதேடியும் அவரைக் கண்டு கொள்ள முடியவில்லை. அந்த ஞானியின் அவதாரம் தான் உனது சின்னமாமா என்று சொல்லுவார்கள். சின்னமாமா சிறுபிள்ளையாக விளையாடித் திரிகின்ற வேளையில் உனது அம்மா அவனை வால்பிடித்துக் கொண்டே திரிவாள். இருவரும் சேர்ந்து பனந்தோப்பில் அட்டாளை கட்டி வைக்கோல் பரப்பி அதன் மேல் உன்னுடைய சின்னமாமா யோக நிஷ்டையில் இருக்க இவளோ பனை மரத்தடியில் அண்ணனுக்குக் காவலிருப்பாள்.

அவன் பல விடயங்களில் தெய்வாம்சமாக விளங்குகிறான். அதனால்தான் ஞானியென்று அவனைக் கூப்பிடுகிறேன்.

ஒருமுறை நான் கதிர்காமம் போக ஆசைப் பட்டுக் கேட்க, சரியென்று கூட்டிப்போனான். கதிர்காமம் போய் ஒரு மடத்திலே தங்கியிருந்தோம். எனக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டு கட்டிய சேலை எல்லாம் பழுதாய்போக அவன் எனது சேலையைத் தானே தோய்த்து முழு வேலைகளையும் செய்தான். எனக்கோ நான் சாகப் போகிறேன் என்ற பயம் வந்துவிட்டது. "மகனே நான் இங்கு செத்துப்போய் விடுவேனா" என்று அவனைப் பார்த்துக் கேட்க, "ஏனனை பயப்படுகிறாய் கதிர்காமக் கந்தன் சன்னிதியில் சாகக் குடுத்துவைக்க வேண்டும். நீ கவலைப் படாதே, அவன் பார்த்துக் கொள்வான்," எனத் தேறுதல் சொன்னான். சில நிமிடத்தில் முன்பின் தெரியாத அழகே உருவான ஒரு சிறுவன் வந்து ஒரு மாம்பழத்தைக் கொடுத்துவிட்டு, என்னையும் பார்த்துச் சிரித்துவிட்டு ஓடிவிட்டான். யார் அந்தப் பையனென்று விசாரித்து அறிய முடியவில்லை. உன் சின்னமாமா அந்த பையன் தந்த மாம்பழத்தை வெட்டி எனக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்தான். அந்த மாம் பழத்தின் சுவையை நான் என் ஜென்மத்தில் அதற்கு முன்னோ பின்னோ சுவைத்த தில்லை. அதை உண்ட மறுகணமே என்வயிற்றோட்டம் நின்று விட்டது. நானும் தென்புடன் எழுந்து சுவாமி தரிசனம் செய்தேன்.

உனது மாமனுக்கு அந்த முருகனே சிறுவனாக வந்து மாங்கனி கொடுத்து விளையாடி இருக்கிறான், என்பது பின்புதான் தெரிந்தது. என்னைத் தைரியப்படுத்தவும் சுகப்படுத்தவும் பரம்பொருளை அழைத்து மாங்கனி பெற்றுத் தந்தவன் ஞானிதானே? "பேரா", என்று கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடத் தன்னை மறந்து பரவச நிலையில் சொன்னார் பெத்தாச்சி.

"கஷ்டப் படுபவன் பாக்கியவான், அவன் ஆறுதல் அடைகிறான்" என்று யேசுக்கிறிஸ்து நாதரின் வார்த்தையை நான் நிதர்சனமாக அனுபவித்தவன். தந்தையை இளமையிலேயே இழந்தவன். வாழ்க்கையில் பல போராட்டங் களையும் துன்பங்களையும் அனுபவித்தவன் நான். ஆனால் இன்று அந்தப் பெருமான் வாக்குப்படி ஆறுதலாக இருக்கிறேன். அதற்குக் காரணம் எனது பெற்றோர் என்னை ஒரு ஞானிக்குப் பலிக்கடா வாக்கி அவரது நிழலில் வாழும் பேற்றைத் தந்ததனாலேயே தான் என்பது மறக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

அது சரி யாரிந்த சின்னையா - எனது சின்னமாமா என்று உங்களுக்கு தெரியாதே, அவர் வேறு யாருமல்ல சின்னையா என்று தமது உறவினர்களால் செல்லமாக அழைக்கப்பட்டும் ஐயா என பாசத்தோடு அன்பர்களால் அழைக்கப்பட்டும் வந்த கார்த்திகேசு சுவாமிகளே!

இவர் எனது தந்தையாருக்கு எழுதிய ஞான விளக்கங்கள் மெய்ஞானதீபம் என்னும் பெயரில் ஒன்றாக தொகுக்கப்பட்டு நூல் உருப்பெறாமல் 1936ம் ஆண்டு தொட்டு இன்றுவரை இருக்கிறது. அவரது நூற்றாண் டான இவ்வாண்டிலாவது அது வெளிவருமானால் உலகிற்கு ஒரு நற்பேறாக அமையும் என்பது திண்ணம்.

************

# சத்திய சமரச சன்மார்க்கம்

## கார்த்திகேசு சுவாமிகள்

பிரகதிக்கேணியாய்-அருளமுதளிக்கும் அன்னையாய்-வந்திப்போர் நெஞ்சினில் வாச னாய்-மானிடயாக்கை தாங்கி- அருமறை களாயுள்ள வேதப் பொருள்களைச் சென்ற இடமெல்லாம் மக்கள் யாபேரும் உய்யும் வண்ணம் வெகுவிரிவாய் வியாக்கியானஞ் செய்து வெற்றிக் கொடியேந்தி திரியும் எமது ஞானத் தந்தையாம் ஸ்ரீசத் சித்திரமுத் தடிகளின் சீர்கழல்களைச் சிரமேற்றாங்கி அன்னாரின் குழுவினர்களாகிய சகோதர சகோதரிகளுக்கு எமது அன்பு கலந்த ஆசியுரித்தாகுக! அன்பர்களே நீங்கள் யாபேரும் சீரும் சிறப்பும் பெருகி என்றும் சிரஞ்சீவிகளாய் வாழ்வீர்களாக! அடியேனும் உங்கள் இவ்வாண்டு விழாவில் இக்கடிதமூலமாய் கலந்து கொள்கிறேன்.

அன்பர்களே "யான் எனது என்னுஞ் செருக்கு அறுத்தான் கட்டே யுலகு" என்பர் அறிவுடையோர். உலகில் தோன்றிய மகான்கள் யாவரும் மக்களின் இச் செருக்கை - அறுப்ப தற்கே ஞானப் பிரச்சாரஞ் செய்து அரும்பாடு பட்டார்கள். அதனால் அவர்கள் பல இன்னல் களுக்கும் ஆளானார்கள். செருக்கறுப்ப தென்றால் இலகுவான கருமமா? சமயம் என்றால் காலம், தருணம் அல்லது வேளை யாகும். காலத்துக்குக் காலந் தோன்றிய ஒவ்வோர் மகான்களின் கற்பனைகளைப் பின்பற்றியோர், கற்பித்தோரின் நாமங்களால் ஒவ்வோர் சமயஞ் (மதஞ்) செய்தார்கள். அதனால் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒற்றுமையாய் இருக்கவேண்டிய சனசமூகம் பௌத்தம், கிறிஸ்த்தவம், இஸ்லாம் என பலசமயங்களாய் பிரிந்து சுற்றில் யானென தென்னுஞ் செருக்கையதிகரிக்கச் செய்தார்கள். இவைகளின் விளைவுதான் உலகில் தோன்றிய பலவகையான யுத்தங்களுக்கும், அழிவு களுக்கும், வேற்றுமைகளுக்கும், காரணமா யிருந்தது - இருக்கிறது - இருக்கப்போகிறது.

அன்பர்களே கிறீஸ்தவர்கள் நாலும் நாலும் எட்டென்றால் அது இஸ்லாமியர் களுக்கோ, இந்துக்களுக்கோ அல்லது வேறு எந்தச்சமயத் தவர்களுக்கோ பத்தாயிருக்குமா? இருக்கவே இருக்காது. உண்மைகள் என்றும் உண்மைகள் தான். நாங்கள் எங்கள் கர்த் தாவை ஆண்டவனை வெவ்வேறு பாசைகளில் ஏகோவா, அல்லா, அல்லது சிவன் என்று அழைத்தாலும் அவ்வார்த்தைகள் குறிக்கும் பொருள் ஒன்றுதானே? ஏன் எமக்கு இந்த நாத நாம மயக்கங்கள். எல்லா மதங்களும் உண்மைகளையே போதிக்கின்றன. எவ்வளவு தூரம் ஒருவன் தனது சமய நூல்களை ஆராய்ச்சி செய்தாலும் மேற்கூறிய "யான் எனது" என்னுஞ் செருக்கை அறுக்கானே யாகில் அவன் பெரும் அஞ்ஞானியே ஆவன்.

அன்பர்களே! இன்பமுந் துன்பமும் தான்தர வருபவை. அறியாமையால் எங்களில் அனேகர் பொய்யை மெய்யாகவும் துன்பத்தை இன்பமாகவுங் கருது கிறார்கள். பிறந்தோர் உறுவது பெருகியதுன்பம், பிறவார் உறுவது பெரும் பேரின்பம்; பற்றில் வருவது முன்னது பின்னது அற்றோர் உறுவது அறிக. (மணி மேகலை) என்ற வாய்மைகளை ஆய்ந்து உணருங்கள். பாவனைக் கெட்டாத பரம் பொருளை எத்தனை பூசை புணக்காரங்கள் செய்தாலுங் காணமுடியாது. பற்றையறுப்ப தோர் பற்றினைப் பற்றவேண்டு மென்றறிந்து கொள்ளுங்கள். கொலை, களவு, பொய், மது, மாமிசமுண்ணல், சூது, விபச்சாரஞ் செய்தல் முதலிய தீயவொழுக்கங்களை விலக்கி நல்லொழுக்கங்களைப் பின்பற்றி உண்மையாக நடப்பவர்களுக்குக் கல்வி, செல்வம், கீர்த்தி, இன்பம் யாவும், அவர்களை நாடிக் கூடிக் கொள்ளும். நல்வினை இன்பத்தையுந் தீவினை துன்பத்தையுந் தரும். ஆனால் இவை பிற விக்கு மாற்று இல்லை. இறவாப் பிறவாப் பெரும்

பேற்றை நல்குந் திருவினையைக் குரு மகானிடம் இருந்து அறிந்து சாதனை செய்யுங்கள். மேன்மை யுறலாம்.

அன்பர்களே! நீங்கள் யாபேரும் தன்னையுணர்ந்த தலைவனில் கலந்து தானவனாய் வீற்றிருக்கும் ஆதிரை முத்தனை திருவா(ய்) திரைமுத்தனை - சித்திரை முத்தனைக் குருட்டினை நீக்குங் குருவாகக் கொண்டிருக்கிறீர்கள். உங்களிலும் மேலான பாக்கியவான்கள் யாரிருக்கிறார்கள். அவரிடத்தில் வைக்கும் அன்புதான் பற்றற்றான் பற்று. அப்பற்று உங்களைக் கஸ்டங்களில் ஆழ்த்தாமலும், வீண் வேலைகளிற் பிரவேசிக்கவிடாமலுந் தடுக்குமென்பது சத்தியம். செல்வத்தில் செல்வம் மாபெருஞ் செல்வம் அருட் செல்வமாகும். "அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம் பூரியார் (இழிந்தவர்) கண்ணுமுள" - என்றார் தேவரும்.

அதனை அடியேன் "தன்னையறியு மறிவு" என்பேன். தன்னையறிந்தவன்தான் தலைவனையறிவான். எமது ஞானத் தந்தை என்னை என்னில் எனக்குக் காட்டினார். பின் நான் அவரை என்னில் கண்டேன். அது மாபெருஞ் ஞானச் சுடர் அதிலேயே வாழ்ந்து வருகின்றேன். அவரின் வாழ்க்கை நிலைமையே உண்மை. அவரின் வார்த்தைகளே பிரமாணம் அவரின் செய்கையே வழிகாட்டி. அவரின் வாழ்கையை நம்பி அவரின் வார்த்தைகளைக் கேட்டு அவரின் செய்கைகளை பின்பற்றுகிறவன் தான் அவனாகிறான். ஆனால் நீங்களும் அவர் பேரால் **"சித்ரமுத்து சமயம்"** என்று ஒன்றுண்டாக்கி மேலும் "யான் எனது" என்னுஞ் செருக்கை கூட்டிக்கொள்ளாதீர்கள். உலகில் தோன்றிய எந்தமகானும் முன்னொரு போதுமில்லாத உண்மைகளைக் கண்டு பிடிக்கவில்லை. ஆனால் அறியாமையால் அம்மக்கள் மாயையில் சிக்கி மறந்து போய் இருந்தவைகளை நினைவுக்குக் கொண்டு வந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உண்மைத் தத்துவங்களை உணர்த்துவோன் போதகனெனப்படுவான். அவன் மூவர் தேவர்யாவரிலும் மேலானவன் என்றுணர்ந்து சித்திரமுத்தனாய் வந்த அத்தனை நம்பி அவன் போதனைகளின் படி நடவுங்கள் நன்மையுண்டு.

அன்பர்களே! சகோதர சகோதரிகளே நற்கருமங்களில் துணிவுகொள்ளும் மக்கள் கூடிய கதியில் மோக்க வழியைக் கண்டடைவார்கள், கேவலம் பூமியில் சிற்றின்பம் அனுபவிக்க விரும்பும் மனிதன் எவ்வளவு கஸ்டத்தோடும் செலவோடும் அதற்குரிய பெண்ணை அடைகின்றான். அடைந்த பின்னும் அவளுக்கென்ன செய்கிறான்? அவனின் உடல், பொருள், ஆவியாவும் என்னவாகிறது? ஒரு சணநேரமும் நிலையில்லாத இவ்வின்பத்துக்கே இவ்வளவென்றால் நிச்சயமாயுள்ள பேரின்பத்தையடைய எவ்வளவு கஸ்டமும் செலவும் அற்பணமும் வேண்டும். பேரின்பக் கிழத்தியாம் பராசக்தியை அருளொளி மாதாவை அடைதல் இலகுவான கருமமா? உங்கள் தேட்டத்தில் எவ்வளவு இதற்கென்று சேகரித்து வைத்திருக்கிறீர்கள்? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டால் அடைவானா? அன்பும் அறமுமே இன்பத்துக்கு அடிப்படை என்றுணருங்கள். எங்கள் தறுகுறும்பான செய்கைகளுக்குக் காரணமாயிருப்பது நாங்கள் உட்கொள்ளும் உணவே என்று உணர்ந்து, எல்லா வரங்களையும் தரக்கூடிய தாவரபட்சணிகளாயிருங்கள்.

அன்பர்களே! நீங்கள் நல்ல சுகபலத்துடனிருக்க அடிகளார் காட்டிய ஆசனப் பயிற்சிகள் மாத்திரம் போதாது. பின்வரும் ஏதங்களும் தடங்கலாயிருக்கும் அவைகளையும் மறந்திருங்கள்.

1 லாகிரி வஸ்த்துகளைப் பானம் பண்ணுதல்,
2 அகாலங்களில் தெருக்களில் திரிதல்,
3 பெண்கள் தனிமையாயிருக்கும் போது வார்த்தையாடுதல் தனிவழி போதல்,
4 கெட்டகூட்டம், விளையாட்டு, கூத்து, சூது இவைகளில் ஆசை வைத்தல், அவைகளைப்பார்த்தல்,
5 கெட்டவார்த்தை பேசல், சத்தியம் பண்ணுதல், பொய்பேசுதல்,
6 சுருட்டு, சீக்கறற், பீடி முதலியவற்றைப் புகைத்தல் அதிகம் பசையுள்ளதும், காரம், புளி, உப்புச் சேர்த்ததுமாகிய உணவுகளை உட்கொள்ளுதல்
7 முயற்சியில் கவனமின்மையாய் இருத்தல்
8 தனது அறிவுக்கு எட்டாததும், கிட்டாதது மாகிய விஷயங்களில் மூளையைச் செலுத்தல்
9 அதிக நித்திரையும் அல்லது சொற்ப நித்திரையுங் கொள்ளுதல்
10 கடனாளியாயிருத்தல் முதலியவைகளே.

இவை தொடக்கத்தில் இன்பத்தைத் தரக்கூடியவை போல் தோற்றி ஈற்றில் மக்களை

உருத்தெரியாமலேஅழிக்கு மாற்றலுடைய வைகள். இக் குற்றங்களில் ஏதும் ஒருவ னிடத்தில் இருக்குமானால் அவனுக்குத் திரு வருள்கிட்டா. மேலும் கோபவார்த்தை, பழி வார்த்தை, வீண்கதை, பேரவா, பிறரை வஞ் சித்தல், முதலியவைகளும் அழிவையே தரும்.

அன்பே அரனைக்காட்டும். அன்பு எல்லாப் பிராணிகளிடத்தும் இருக்க வேண்டியது. அன்பினால் கோபத்தையும், பகைமையையும், நன்மையால் தீமையையும், மெய்யால் பொய் யையும், ஈகையால் உலோபத்தையும் வெல்ல வேண்டும். உடம்பின் உறுப்புகள் யாவும் மனித னுக்குப் பாகமாய் இருப்பது போல உலக ஜீவன்கள்யாவும் ஈசனின் பாகமாய் இருக்கிறது. உடம்பின் ஓர் பாகத்துக்கு ஊறு நேர்ந்தால் மனிதனுக்கு நோவது போல உலக ஜீவன் களுக்கும் ஊறு நேர்ந்தால் இறைவனுக்கு வேதனை உண்டாகும். புனிதமான உடம்பில் இருப்பவனே மோட்சத்தில் இருப்பவனாவான். வேதனையில் நின்று நீங்கவேண்டுமானால் நன்மையை கடைப்பிடிக்கவேண்டும். கூடுமான வரையில் பிறர் வருந்தாமலிருக்கப் பார்க்க வேண்டும். நற்செய்கையும் இரக்கமுமே நித்திய இன்பத்துக்கு அடிப்படை. உலகத்தில் தன்னலங் கருதியே ஒருவன் மண்ணையும் பெண்ணையும் பிள்ளைகளையும் பொன்னையும் நேசிக்கிறான். என் மனைவி என்னை நேசிப்பது தன்னலங் கருதியே - இது சிற்றின்பத்துக்கு. நீங்கள் பேரின்பத்தையடைய விரும்பினால் உங்கள் நலங்கருதி - சகல ஜீவர்களிடத்தும் அன்பாய் இருங்கள். ஆனால் உங்களுக்கு துன்பத்தை விழைக்கும் ஜீவன்களைக் கிட்டிச் சேராதேயுங்கள்.

அன்பர்களே! ஆகாயத்துள்ள சூரியன் எவரையாவது நீக்கிக் காய்கிறானா? இல்லையே. சகலரையும் தன் பிரபையால் பிரகாசிக்க வைத்தாலும், தன்னுடைய பதவியின் நின்று நீங்கவில்லை. அது போல நீங்கள் மிருகம், மனிதன், பறையன், பார்ப்பான், வறியவன், பணக்காரன், இஸ்லாமியன், கிறீஸ்தவன் என்ற வேற்றுமை காட்டாமலிருந்து உதவிபுரியுங்கள். ஆனால் உங்கள் நிலையிலிருந்து கீழ் இறங்கிவிடாதீர்கள். மேல் பதவியடைய விரும்பு கிறவர்களுக்குத் தடங்கலாய் இராதீர்கள். மேலும் ஈசனடியவனாய் இருந்தால் பறையனாய் இருந் தாலும் பார்ப்பானாக மதித்து வணங்குங்கள். இது மிகவுங் கஸ்டமான கரும மல்லவா? ஒருவன் ஈசன் அடியவன் தானே என்று அறிவதற்கு முன் தானே ஈசனடியவனாக மாற வேண்டுமென்று அறிந்து கொள்ளுங்கள்.

அன்பர்களே! ஞான போதகரின் அனுக்கிரகம் பெற்றுவாழும் அருமைச் சகோதர சகோதரிகளே, இன்னுங் கேளுங்கள். உலகிலுள்ள சகல ஜீவராசிகளும் தாய் தந்தையர்களின் நேசங்களாலாகிய உடம்பு களைப் பெற்றவர்களே. கருவூராகிய ஒருர் பிறந்தவர்களே! நேசம் அன்பு பரமாய சக்தி யாயிருக்கிறது. "பரமாய சத்தியுள் பஞ்சமாபூதம் தரம் மாறிற்றோன்றும் பிறப்பு" என்றாள். எம்பாட்டி ஔவையார். இப்பிறப்பு முறைகளை யுற்று நோக்குமிடத்து நாங்கள் யாபேரும் பரம்பரையாக வந்த தாய் தந்தையர்களின் அன்புருவாய பிள்ளைகளே. பஞ்ச பூதங்களா லாகிய உடம்பைத் தாங்கியவர்களே! ஆகை யால் நாங்கள் யாபேரும் அன்பு பொருந்தி ஒருவரையொருவர் இம்சிக்காமலும் வஞ்சிக் காமலும் இருக்க வேண்டும். இதுவே சகதர்மம்.

மேலும் பிறப்புகளுள்ளும் மக்கள் தேவர் நரகர் உயர்திணை மற்றும் உயிருள்ளனவு மில்லனவும் அஃறிணை என்றார் பவணந்தி முனிவரும். மக்கள்? நாம் தான். தேவர் எங்கள் காயத்தின் மேல்பாகமாகிய ஆகாயமாகிய இமைய மென்கிற இமைகள் இரண்டுக்கும் மத்தியாய் இருக்கின்ற திலகமிடும் இடமாகிய கபாலத்திலுள்ள மேலாகிய தேவ இந்திரியந் தான். நரகர் இமையம் விட்டு நழுவி ஆகாயத்திலிருந்து விழுந்து, மூத்திரமுஞ் சீயுஞ்சொரியும் அழல்வாய் நெருப்புப் போன்ற உதிரத்தை மாதம் மாதம் கக்கும் மாதாவின் கருப்பையில் இந்து சமுத்திரத்தில் குடிகொண்ட இந்திரியத்துளிகள் - கற்பங்கள் தான். உயர்திணை மேலாகிய சாதி மற்றையாவும் அஃறிணை அல்லாத சாதி கீழ்சாதியென்றபடி.

மக்கள் தானே சீவபோகத்தால் நரகர் களாகவும், சிவபோகத்தால் தேவர்களாகவும் மாறுகிறார்கள். ஆகையால் மக்கள், தேவர், நரகர் என்ற முப்பாடுடைய மனுவர்க்கத்தை நாம் வஞ்சிக்காமலும் இம்சிக்காமலும் இருப்பதுடன் எங்களைப் போலவே அவர்களையும் நேசித்து இயன்றவரை ஒருவருக்கு ஒருவர் உதவியா யிருக்க வேண்டும். ஏன் நாம் யாபேரும் ஒரே சாயலாயிருக்கிறோம் அல்லவா? காந்தி சாதிபேதம் சமயபேதம் பாராட்டாது இந்தியர்

யாவரையும் அரிசனமென்று சமமாய்ப் பாவித்து அவர்களுக்குச் சுயதேச ஆட்சி எடுத்துக் கொடுத்தாரல்லவா? இவர் அன்புதான் என்னே? அன்புக்கு முண்டோ அடைக்கும் தாழ். அன்பே சிவம். அன்பினால் தான் அன்பை, சிவத்தை அடையலாம். இது பசுதர்மமாகும்.

இந்நாட்டிலுள்ள சுயநலங் கருதிச் செல்வர்கள் காந்திமகானைப் போல் நடந்தால் வறுமைப் பிணி நீங்கி இந்தியா சுவர்க்கம் போல் பிரகாசிக்குமல்லவா? என்ன செய்வது மக்கள் பண்டுசெய்த பழவினையை அனுபவிக்க வேண்டியவர் களாயிருக்கிறார்களே?

பண்டு உலக மக்கள் வாழ்வுக்கு உறுதுணையாயிருக்க வேண்டுமென்று கருதித் தங்கள் தங்கள் இயல்புக்கும் அறிவுக்குந் தக்க (வேளாளன், மாலுமி, கொல்லன், தச்சன், கன்னான், குயவன், தட்டான், சேணியன், சிற்பி, வண்ணான், அம்பட்டன், மருத்துவன், நட்டுவன், பறையன், தோட்டியென்ற) முறைகளில் நின்று தொண்டாற்றி வந்தார்கள். இப்பிரிவுகளால் ஒருவருக் கொருவர் தாழ்ந்தவர்கள் அல்லர். நாளடைவில் விகற்ப புத்தி மக்களுள்ளத்தில் புகுந்து நான் மேல் சாதி நீ கீழ் சாதி யென்று அகடம் (பொல்லாங்கு) பேசி விகடம் (வேறுபாடு) உண்டாக்கினார்கள். இதனால் நாடு அன்னியர் வசப்படவும் அவர்களின் சகவாசத்தால் சாத்வீக குணத்தை யூட்டும் தாவர உணவுகளுக்குப் பதிலாக மக்கள் இராசத தாமத குணங்களைக் கூட்டும் மச்சமாமிச பட்சணிகளாய் மாறி பாலுக்குப் பதிலாகப் பனங்கள்ளையும் வேறு லாகிரி வஸ்துக்களையும் உட்கொள்ளத் தொடங்கினார்கள். வந்தது நாசம். பஞ்சமா பாதகங்கள் தலைதூக்கியாடவும் இனந் தெரியாத நோய்கள் வந்து மக்களை வாட்டவுந் துவங்கின. நாங்கள் யாபேரும் பழையபடி எங்கள் பழக்க வழக்கங்களைச் சீர்படுத்தி, கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும் எனும் தன்மையில், புலையுங் கொலையுங் களவுந் தவிர்க்க வேண்டும். பிறவியின் பயன் வீடுபெற நிற்றல் என்றுணர வேண்டும். தன்னை யாரென்றறிய வேண்டும். தலைவனை யணையச் சத்திய நெறியாம் மத்திய பாதையில் ஏறவேண்டும். அங்கு தான் அவனான நிலையென்று உணர வேண்டும். இதுவே பதிதர்மமாகும். "மாசற்ற கொள்கை மனத்திலடைந்தக் கால் ஈசனைக் காட்டும் உடம்பு"

அன்பர்களே! உடல்கள் யாவுங் கோவில்கள், உயிர்கள் யாவும் இறைவன் திரு வுருவங்கள், உயிர்களுக்கு உயிராயுள்ள ஆவிசொரூப மாகிய ஆத்துமாத்தான் சிவன், ஆண்டவன், அல்லா என்ற பல நாமங்களை யுடைய கடவுள். இக் கடவுளைக் காட்டிக் கொடுப்பவனே எமக்குக் குருநாதன். இவன் சைவ சமயிகளுக்கு சிவசுதனாகிய கணபதி அல்லது கந்தனாயும். கிறீஸ்தவர்களுக்கு தேவசுதன் ஏசுநாதனாயும் முஸ்லீம்களுக்கு அல்லாவின் திருத்தூதனாகிய முகமதுவாயும் இருக்கிறார் என்றவுணர்வு எல்லா மக்களுக்கும் வந்தபின் தான் சாதிச்சண்டை சமயச் சண்டை யாவுமொழிந்து சமாதானம் தலையெடுக்கப் போகிறது. இவ்வேற்றுமைகளை ஒழிக்க நாம் ஒவ்வொரு வரும் பாடுபட்டால் எங்கள் சீவிய காலத்திலேயே இவ் வின்பத்தைக் காணலா மென்பது திண்ணம்.

மேலும் இந்த மெய்க் குருநாதனை எம் சிற்றறிவைக் கொண்டு காணமுடியாது. ஒரு சற்குருநாதனைத் தேடி நாடிக் கூடித்தான் அறிய முடியும். மெய்க் குருநாதனை அறிந்த பின்தான் நாங்கள் மாற்றிப் பிறந்தவர்க ளாவோம். பாசவேர் அறுத்துப் பரம்பொருளைக் கண்டவர்கள் ஆவோம். விதியின் எழுத்தைக் கிழித்தவர்கள் ஆவோம், வேல் என்னுங் கோலினை ஏந்தியவர்கள் ஆவோம். ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையுங் களைந்தவர்கள் ஆவோம். றகுமான் நிலையை அடைந்தவர்களாவோம். சிலுவையை தூக்கி யவர்களாவோம் என்று அறியவும்.

"நெறிபட்ட சற்குருநேர்வழி காட்டில்
பிறிவற்றிருக்கும் சிவம்"

"சிவனுருவந்தானாய்ச் செறிந்தடங்கிநிற்கில்
பவனாசமாகும் பரிந்து."(ஔவையார்)

அன்பர்களே! இங்கு கூறிய யாவும் உங்கள் சிந்தனைக்கு விருந்தாயிருக்கட்டும். அடியார்களுக்கும் அவர்கள் நடுவிலிருக்கும் அம்மை அப்பருக்கும் வணக்கம்.

* * * * * *

With Best Wishes From :-

**ZAPATA RANDY MARINE**

412, ALUTHMAWATTE ROAD,
COLOMBO - 15. - SRI LANKA.
Tel: (01) 523005

With Best Wishes From :-

Dr. M RAMAJEYAM J.P.

126, Parakrama Road,
Colombo - 14.

With Best Wishes From :-

**MANO TRADERS**

REFIEND PURE GINGELLY OIL
விளக்கிய சுத்தமான நல்லெண்ணெய்

**155-17, MESSENGER STREET, COLOMBO-12**
**TELEPHONE:- 449233**

With Best Wishes From :-

Mrs.Suthakaran

32, Hamton lane
Wellawatha
Colombo - 06

# நீறு பூத்த நீற்றினன்

பொன். பரமபாதன்

கார்த்திகேசு ஐயா யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் உள்ள நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கரம்பனை வதிவிடமாகவும் கொண்டவர். இவர் அரசாங்க சேவையில் பணி யாற்றி வரும் காலத்திலேயே ஓர் ஞானியாகி விட்டார். இல்லற வாழ்வில் இருந்து கொண்டே துறவிக்குரிய குணாதிசயங்களுடன் தெய்வீக நாட்டமும் அருட்சித்திகளும் கைவரப் பெற்றவராக விளங்கினார். கொழும்பில் கொம்பனித் தெரு, டோசன் வீதியில் உள்ள 31/21ம் இலக்க இல்லத்தில் வசித்து வந்தவர் அவ் இல்லத்தை அருளொளி நிலையமாக ஆக்கி அருட்பணி ஆற்றியவர்.

கார்த்திகேசு ஐயாவை சிறுபிராயம் முதலே அறிவேன். எமது தந்தையாரின் ஆத்மார்த்த நண்பர்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு - என்ற குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் கார்த்திகேசு ஐயா.

பிறருக்கு உற்ற நோயை தமதன்பின் காரணமாக திருவருள் துணைகொண்டு போக்கும் வல்லமை கொண்டிருந்தார்.

பல சந்தர்ப்பங்களில் வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளிகளுக்கு உயிர்ப் பிச்சை அளித்து சுகமும் பெறச் செய்திருக்கிறார்.

சம்பந்தர் திரு நீற்றின் பெருமையை வாயாரப் பாடினார். ஆனால் ஐயா கண்ணாரக் காட்டி மெய்யார உணர வைத்தவர். அவரது அருட்கடாட்சத்தால் நன்மை பெற்றபலர் அன்று வெள்ளவத்தையில் வாழ்ந்தார்கள். அவர் கைபட்ட காரியம் சித்திக்கும் என்ற நம்பிக்கை எல்லாரிடமும் இருந்தது.

நாளும் கோளும் சகுனமும் பார்க்காத பகுத்தறிவாளராக வாழ்ந்தார். வைத்தியம் சோதிடம் இரண்டிலும் தீர்க்கமான அறிவு பெற்றிருந்தார். அவற்றிற்கெல்லாம் மேலாக திரிகால ஞானம் அவரிடம் உறைந்திருந்தது.

அவரது தீர்க்கதரிசன வாக்குகளை அலட்சியப்படுத்தியவர்கள் துன்பத்தையும் நம்பியவர்கள் அமைதியையும் பெற்றுள் ளார்கள். இதற்கு உதாரணமாக பலர் இன்றும் சான்று பகர வாழ்கிறார்கள்.

1956ம் ஆண்டு என்று நினைக்கிறேன். என் ஒரே தங்கையின் தலைப்பிரசவம். அவரை வைத்தியசாலையில் நிறுத்தியிருந்தோம். குழந்தை பிறந்தது. ஆண்குழந்தை. ஐயாவின் ஆசியுடன் நடந்த திருமணம் தங்கையுடையது. எல்லாரும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினோம். ஆனால் எமது விசுவாசத்திற்கும் சந்தோசத் திற்கும் ஆப்பு வைத்த நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

குழந்தையின் உடல் திடீரென நீல நிறமாக மாறி மூச்சுத்தினறலும் நோயும் கண்டது. வைத்திய நிபுணர்கள் பலரும் விரைந்தார்கள். தமது வைத்தியத்திறமைகள் யாவற்றையும் காட்டியும் கடைசியில் கையை விரித்து விட்டார்கள். அக்குழந்தையின் ஆயுளை நிர்ண யிக்கவுஞ் செய்தார்கள். சிலமணி நேரந்தான் அதன் ஆயுள் என்பது நிர்ணயிக்கப்பட்டு விட்டது. எனது மைத்துனர் செய்வதறியாது கலங்கி நின்றார். ஐயாவின் நினைவு வந்ததும் கார்த்திகேசு ஐயாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரத்தை சொல்லி நல் வாக்குப் பெற முனைந்தார். ஐயாவிடம் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. ஐயா எது சொன்னாலும் அது ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட வேதவாக்கு அவருக்கு. ஐயாவிடம் தமது துன்பத்தை எடுத்துரைத்தார் துரைராஜா.

யாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த ஐயா தொலைபேசியின் மறுமுனையில் மௌனமாக இருந்தார். துரைராஜாவின் உள்ளத்தைக் கவலை சூழத் தொடங்கியது. ஒரு மூன்று நிமிடமளவு மௌனத்தின் பின் வாய்திறந்து கவலை வேண்டாம் அவனை கல்லில் கட்டி கடலில் போட்டாலும் சாகமாட்டான். உயிர் ஆபத்து

கிடையாது நம்புங்கள் என்று கூறி தாமே நேரில் வைத்தியசாலை வருவதற்கும் உறுதி கூறினார். துரைராசா தமது காரில் ' ஐயா அவர்களை போய் அழைத்து வந்தார்.

வந்தவர் ஆஸ்பத்திரியில் குழந்தையின் அருகில் சிறிது நேரம் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தார். பின் கையில் திருநீற்றை எடுத்து குழந்தையின் மேல் தடவினார். இவன் சிரஞ்சீவி என்று கூறிவிட்டு புறப்பட்டு விட்டார். அவர் புறப்பட்ட மறுகணம் குழந்தை "அச்சூம்" என பெரிதாக தும்மியது.

ஒடுங்கிவந்த உயிர்ப்பு மீண்டது. பிள்ளை பிழைத்து விட்டான். எல்லோர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர். வைத்தியர் களுக்கோ புரியாத புதிர். ஐயாவின் அருளாசியால் வாழ்வுபெற்ற அந்தக் குழந்தை இன்று ஒரு வங்கி அதிகாரியாக நலமுடன் குடும்பம் நடத்துகிறார். இது யான் கண்டு அனுபவித்த உண்மைக் கதை இதைப்போல் பலப்பல.


இதனால் ஐயா அவர்களை சித்து விளையாட்டுக்காரன் எனயாரும் நினைத்து விடக்கூடாது. அவர் அதன் மூதல் எதிரி. சித்து விளையாடல் முத்திக்குப் பங்கம் என்ற கருத்தில் உறுதியாக இருந்தவர். அப்படி யானால் அவர் செய்தது ? மக்களுக்காக, பிறர் நலனுக்காக எல்லாம் வல்ல பரம் பொருளை மனம் ஒன்றி வேண்டுவதே.

ஐயா 1979ல் தமது ஊராகிய கரம்பனில் சமாதிநிலை அடைந்தார். அதை அறிந்த யாம் அப்புனித தலத்திற்கு யாத்திரை மேற்கொண்டு அவர் நினைவாக நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றினோம்.

அவர் மேற் கொண்ட பணிகளை அவரின் இளைய புதல்வராகிய சிவகுருநாதன் அவர்கள் மேற்கொண்டு நடத்துகிறார்கள். அவரது இல்லம் இறை பணிக்கு அர்ப்பணிக்கப் பட்டு தத்துவஞானத் தவச்சாலையாக ஞானப் பணிகளை சிறப்பாகச் செய்து சத்திய சமரச சன்மார்க்க நீதியை நிலைநாட்ட அரும்பாடு பட்டு வருகிறது.

ஐயா தொடக்கி வைத்த சனமார்க்கப் பணிகள் மேன்மேலும் வளர்ந்து உலக ஈடேற்றத்திற்கு வழிவகுக்கட்டும்! கார்த்திகேசு அடிகளாரின் திருநாமம் அகிலத்தார் உள்ளங் களில் நிலைத்து நின்று வழிகாட்டட்டும்.


With Best Wishes



சிவானந்த போதத்தில் சீடன் குருவிடம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை மனம் கேட்க அறிவு கூறுகிறது.

ஐயமின்றி உடல் பொருள் ஆவி மூன்றும்
ஆண்டவனே உன்னதென் றளித்து பின்னும்
தூய்யகுரு நாதனுக்கே அடிமையாகிச்
சொன்னபடி கேட்பதற்கே தொண்டனாகி
மெய்யென்றேஅவர்மனமும்களிக்கும்மட்டும்
வேண்டியதோர்சோதனைக்குமிதக்கிடாமல்
செய்ய திரு மலரடியிற் காத்திருந்தாற்
செனியதனி லுபதேசம் செய்வார்தாமே.

நியூ நித்தியகலா நகைமாளிகை

**NEW NITHIYAKALA JEWELLERS**

(ALL ORDERS EXECUTED PROMPTLY)

19, SEA STREET, COLOMBO - 11

DIAL:- 447111

Space donated by:



எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்.

எண் (கணிதம்) கற்க

தலைநகரில் சிறந்த

ஆசான்

எஸ். கே. தளையரட்ணம்

கற்றால் வெற்றி நிச்சயம்

தொடர்பு

EPI கல்வி நிலையம்

642, ஹினிஅப்புஹாமி மாவத்த,
கொழும்பு - 13
விவேகானந்தா கல்லூரி அருகில்

Space donated by:

உடன் வருவன

நல்வினை தீவினை
நாடிப் புரிந்தோர்பால்
செல்வன நிச்சயமே குதம்பாய்
செல்வன நிச்சயமே

செய்தவம் செய்கொலை
செய்தன்மம் தன்னொடும்
எய்த வருவனவே குதம்பாய்
எய்த வருவனவே

முத்தி யளித்திடு
மூர்த்தியைப் போற்றிசெய்
பக்தியும் பின்வருமே குதம்பாய்
பக்தியும் பின்வருமே

குதம்பைச் சித்தர்

PETTAH ESSENCE
SUPPLIERS

18/1, Dam Street,
Colombo - 12.
Sri Lanka
P.O.Box: 2053
Telephone:
434859, 326235, 449269
Telex: 22948 ESSEN CE
Fax: 434859

With Best Wishes From :-




மனிதனின் நிலை

"நுணுக்கமாகிய அணுக்கள் திரண்டு மனுக்களாக மாறி, மண்ணுலகிற் பிறந்த வகை யுணராமல் மடிந்தழிந்து போகின்றனர். இவை தான் நிகழ்காலத் தடுமாற்ற மனிதன் நிலை"

- சித்ராமுத்தன்

Gopi Photo
COLOUR LAB & STUDIO
148, 1/1, JAMPETTAH STREET,
(opp. New City Bakery)
COLOMBO - 13.
Telephone:- 071-58292

With Best Wishes From :-



As we grow in moral stature, govern and guide our instincts, impulses and urges and give them new direction, we slowly beginto qualify ourselves to rule the mind and not be ruled by the mind. At this stage the outer gates are open, and we find we are guided to the inner gates step by step. That is what the Sages call Grace.

MADURA JEWALLERY (PVT) LTD
47, 1/1 A, SEA STREET, COLOMBO - 11
(ENTRANCE GABOS LANE)
TEL: 345164

# கார்த்திகேசு சுவாமிகள் காட்டும் வழியும் வகையும்

திருமதி. பத்மா சுந்தரேசன்

தவத்திரு கார்த்திகேசு சுவாமிகளின் அருளுரைகளில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்வதே எனது நோக்கமாகும்!

"உலகிலுள்ள அனைத்து இன்ப, துன்பங்களுக்கும் பிரேமை என்ற பேராசையே மூலகாரணம். அதை வெல்வதற்கு திடகாத்திரமும், விசுவாசமும் கொண்டு சற்குருநாதன் காட்டும் செந்நெறியில் ஒழுகவேண்டும்"

செந்நெறி என்பது கூரிய அறிவும், சீரிய ஒழுக்கமும், ஆசாரமும், சாந்த குணமும் தழுவி, ஆசையும் அகந்தையும் அழுக்காறும், சீற்றமும் அகற்றி உன்னுயிர் போல மன்னுயிர் பேணிப் பணிபுரிவதாகும்.

"நாம் உறுதியான தெய்வ நம்பிக்கை யுடன், தளராத குருபக்தியும் உடையவர்களாய் சிவதர்ம சங்கமங்களிற் கூடியுழைக்க வேண்டும். அங்கு நெறிபட்ட சற்குருவைத் தரிசித்து அவருதவியினால் இறைவனை அடையும் நேர்வழியைக் கண்டு கொள்ளலாம். தன்னையும் தன் தலைவனாம் இறைவனையும் தன்னிலே கண்டு கடைத்தேறலாம்."

"தன்னை அறியும் அறிவுதனைப் பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு."

தன்னை அறியும் இவ்வறிவைத் தான் இருக்கும் இடத்தில் கற்றுக்கொள்ள முடியாதெனில் அது எங்கு கிடைக்குமோ அங்கு சென்று கற்றுக்கொள்ள வேண்டும். இதையே இறைதூதர் நபிகள் நாயகம் ஸல்" அவர்கள், உங்களிடம் காணாமற் போன ஒட்டகத்தை அது சீனதேசத்தில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடியுங்கள்" என்றார்கள்.

ஆம், நாம் துன்பமற்று வாழும் வழி, அதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம், ஒழுக்கத்தை மேவிய உறுதிப்பாடு, அதனால் ஏற்படும் தெளிவு, தெளிவின் பயனாய் தெரியப்படும் சற்குரு, சற்குருவால் எம்மில் எம்மால் எமக்கு உணர்த்தப்படும் மெய்க்குரு, அனைத்தையும் சுருங்கக்கூறி வழிகாட்டியுள்ளார் சுவாமிகள்.

அதனை நாமும் பின்பற்றிப் பார்த்தால் என்ன?


"உனது அங்கதேயத்தில் நீ பிறந்த நாள் தொடக்கம் உனது வழிபாட்டுக்குரிய கந்தன் ஆலயம் பூட்டப்பட்டு இருக்கிறதே! அவ்வாலயத்தைத் திறந்து அங்கு ஆரோ கனித்திருக்கும் முருகப் பெருமானை வழிபடுமுரிமை உனக்கேயுரியது. அதோன்று உன்னுள் இருக்கவும் புறவாலயங்களைத் தேடியேன் அலைகிறாய்."

– கார்த்திகேசு சுவாமிகள்

**New Sellkans**
PHARMACY & GROCERY

401, Galle Road,
Colombo - 04
Tel: 588195

Space donated by:



'எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள்மீதே சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லாவலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.' விவேகானந்தர்

# ORIENT TRADING COMPANY

**95, Galle Road, 2nd Floor,**
**Bambalapitiya**
**Colombo - 4.**
Tel: 580547

# 100 ஆண்டு நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு நம் மூதாதையர் வகுத்த அறநெறிகள்

1. முக்திக்கு வழி பக்தி. பக்திக்கு வழி சக்தி, சக்திக்கு வழி ஆரோக்கியம்.

2. முழுப்பயன் அடைய: காப்பி, தேயிலை, புகையிலை, புலால், புகை, பொடி, குடி, கஞ்சா இவைகளை அறவே ஒழித்துக் கட்டவேண்டும்.

3. அதிகாலை 4 மணிக்கு எழுந்தவுடன் கடவுளை நினைத்து வணங்கியபின் ஒரு செம்பு தண்ணீர் அருந்தி, சுமார் 5நிமிடம் நடந்து கொடுத்து மலசலம் கழித்து முகம் கை கால்கள் பால் உறுப்புக்களைக் கழுவ வேண்டும். உடன் தியானத்தில் அமர வேண்டும். அதுபோல் மதியம், மாலை, இரவு சாப்பாட்டுக்குப் பின்ஆக 1 நாளைக்கு 3 முறை தியானம் செய்யவேண்டும்.

4. தியானம் செய்யுமுன் சுமார் 5 நிமிடம் பிராணாயாமம் செய்ய வேண்டும். இது சுவாசப்பைக்கு நன்மை பயக்கும்.

5. பல் தேய்த்தவுடன் வெள்ளைக் கரிசலாங் கண்ணி இலையை(கரப்பான், கரிசாலை) கழுவி வாயில் போட்டு மென்று சாறை விழுங்கி சக்கையைப் பல் தேய்த்து விரல்களால் அண்ணாக்கில் வாய் முழுவதும் தேய்க்க வேண்டும். அல்லது அதன் சாறு 60 மி.லீ குடிக்க வேண்டும்.

   1. இதனால் தொண்டை, மூக்கிலுள்ள கபம் அந்நேரமே வெளியேறிவிடும்.
   2. பித்தம் வெளியாகிவிடும் கல்லீரல், பித்தப்பை சுத்தமாகிவிடும்.
   3. மலம் நன்றாக கழியும்.
   4. நீர் நன்றாகப் பிரியும்.

   இந்த நான்கு வேலைகளையும் செய்யக் கூடிய மூலிகை இது வொன்றே. ஏனெனில் 100 கிராம் கரிசலாங்கண்ணியில் 306மி.கி கல்சியமும், 462 மி.கிராம் பாஸ்பரஸும், இருக்கின்றது. ஆகவே இரத்தழுத்தம் இருதய நோய் உள்ளவர்களுக்கு நோய் நீங்க இது ஒரு வரப்பிரசாதமாகும்.

6. குளித்து முடிந்தவுடன் பொற்றலைக்கையாந் தகரை, தூதுவளை, பொன்னாங்கண்ணி, வல்லாரை, புளியாரை, சீந்தில் தண்டு வில்வம் இலை, அறுகம் வேர், நன்னாரி, மிளகு, கடுக்காய் ஆகிய இவற்றில் ஒன்றை வெய்யிலில் உலர்த்தி பொடி செய்து பாலில் சுத்தி செய்து மீண்டும் இடித்து பொடிசெய்த சூரணம் ஒரு மேசைக்கரண்டி எடுத்து சம னெடை நாட்டுச்சர்க்கரை சேர்த்து சாப்பிட வேண்டும். மிளகு, கடுக்காய், இவற்றை ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டால் போதும்.

   பாலில் சுத்தி செய்யும் விதம்:- ஒரு சட்டியில் பாதியளவு பசும்பாலும் தண்ணீரும் சம னெடை கலந்து ஊற்றி வாயில் ஆவி போகாமல், ஒரு துணியைக் கட்டி மேற்படி சூரணத்தை சிறிது பால் தெளித்து பிசைந்து மேற்படி துணிமேல் வைத்து அதன்மேல் ஒரு சட்டியை மூடி பாலில் முக்கால் பங்கு வற்றும் வரையிலும் காய்ச்சி மேற்படி சூரணத்தை ஆறவிட்டு இடித்து பொடி செய்ய வேண்டும்.

